



# விசுவாசத்துக்கு ஓ.பி.எஸ். — துரோகத்துக்கு அடையாளம் பழனிசாமி!

## நாம் முன்பைவிட கூடுதல் பலம் பெற்றிருக்கிறோம்!

# கடுமையாக உழையுங்கள் 200 தொகுதிகளுக்கு மேல் வெல்வோம்!

**மதுரை,மார்ச் 9–**

**விசுவாசத்துக்கு ஒரு ஓ.பி.எஸ். என்றால், துரோகத்திற்கு அடையாளமாக இருப்பவர்தான் பழனிசாமி அவர்கள்! 2021 தேர்தலின்போது இருந்ததைவிட, நாம் இப்போது கூடுதலாக பலம் பெற்றிருக்கிறோம்! என்றும், கடுமையாக உழையுங்கள்! 200 தொகுதிகளுக்கும் மேல் நாம் வெற்றி பெற வேண்டும்!**

**உங்கள் உழைப்புக்கு நிச்சயம் அங்கீகாரம் இருக்கும்! எனவும், ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்த விழாவில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**நம்முடைய ஓ.பி.எஸ் அவர்களின் ஸ்பெஷாலிட்டி என்ன என்று கேட்டால், எப்போதும் சிரித்த முகமாகத்தான் இருப்பார். இப்போதுகூட பாருங்கள்... அதுதான் அவருடைய பண்பு! பொதுவாக, ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டால்தான் பிரச்சினை ஆகும்; ஆனால், நம்முடைய ஓ.பி.எஸ். அவர்களுக்கு அவருடைய சிரிப்பே ஒருகாலத்தில் பிரச்சினை ஆகிவிட்டது! ஒருமுறை அவர் என்னைப் பார்த்து சட்டமன்றத்தில் சிரித்துவிட்டார். உடனே, ஸ்டாலினைப் பார்த்து ஓ.பி.எஸ். சிரித்துவிட்டார் என்று, ஏதோ, இரண்டு நாட்டுக்குள்ளே போர் வந்த மாதிரி பிரச்சினையாக ஆக்கிவிட்டார்கள்! அரசியலில், ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம்; ஆனால், சட்டமன்றத்திலும், பொதுவெளியிலும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளும்போது, நலம் விசாரித்துக் கொள்வது அரசியல் மாண்பு; அதுதான் பண்பாடு! அப்படித்தான், அப்போது முதலமைச்சராக இருந்த சகோதரர் ஓ.பி.எஸ். அவர்களைப் பார்த்து, மரியாதைக்காக வணக்கம் வைத்தேன். அவரும் சிரித்தார். உடனே இதைக் குற்றச்சாட்டாக ஆக்கிவிட்டார்கள்.**

## ஓ.பி.எஸ்.–ன் ஸ்பெஷாலிட்டியே சிரித்த முகம்தான்!



## மதுரையில் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் மாற்றுக்கட்சியினர் கழகத்தில் இணைந்த விழாவில் – தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!



**கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருமங்கலத்தில் நடைபெற்ற ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் மாற்றுக் கழகத்தினர் தாய்க் கழகம் திரும்பும் விழாவில் பங்கேற்று ஆற்றிய உரை வருமாறு:**

இந்த மேடை, மிக வித்தியாசமான மேடை! சில காலத்திற்கு முன்பு வரை, நம்முடைய அன்பிற்குரிய சகோதரர் ஓ.பி.எஸ். அவர்கள் இந்த மேடையில் இருப்பார் என்று அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார்! ஆனால், லேட்டாக இருந்தாலும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இருந்த தாய்க்கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்திற்குதான் திரும்பி இருக்கிறார்! அவரையும், அவருடன், நம்முடைய இயக்கத்திற்குத் திரும்பியிருக்கும் உடன்பிறப்புகளையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைத் தொண்டனாக நான் மனமுவந்து வரவேற்கிறேன்!

### தாயின் மடிக்கு திரும்பி வந்ததில் மகிழ்கிறேன்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு நீங்கள் மட்டுமல்ல; நானும் இரசிகன் தான்! கழகம் எம்.ஜி.ஆரை வளர்த்தது! அவரும் கழகத்தை வளர்த்தார்! முத்தமிழறிஞர் கலைஞரைத் தலைவராக ஏற்றுக் கொண்டார்! அப்படிப்பட்ட தாய்க்கழகத்திற்கு - தாயின் மடிக்கு நீங்கள் எல்லாம் திரும்பி இருக்கிறீர்கள்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய அ.தி.மு.க., யாருக்கோ அடிமை சேவகம் செய்யப்போனதால், உரிமைக்குரல் எழுப்பித் தாய்க்கழகத்திற்குத் திரும்பி இருக்கிறீர்கள்! தடம் மாறாமல், திராவிடப் பாதையில் பயணத்தை தொடரும் உங்களை எல்லாம் நான் வருக... வருக... வருக என்று வரவேற்கிறேன்!

பேரறிஞர் அண்ணாவின் பெயரைத் தாங்கியுள்ள இயக்கம், அவரையும் - அவரது கொள்கைகளையும் மறந்து, துரோகத்தின் முழு உருவம் ஆனதால், பேரறிஞர் அண்ணா தொடங்கிய இயக்கத்திற்கே நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள்! சுயமரியாதையின் கோட்டையான அண்ணா அறிவாலயத்திற்கு வந்திருக்கிறீர்கள். அண்ணாவின் தம்பியாக - கலைஞரின் உடன்பிறப்பாக - உங்களை எல்லாம் வருக! வருக! என்று மீண்டும் மீண்டும் வரவேற்கிறேன்!

### பச்சைத் தமிழர் பன்னீர் செல்வம் கலைஞரால் பாராட்டப்பட்டவர்!

நம்முடைய அருமைச் சகோதரர் ஓ.பி.எஸ். அவர்களை இந்த மேடையில் பார்க்கும்போது, எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. 2008-இல், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, நம்முடைய ஓ.பி.எஸ். அவர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தார். அப்போது, நவம்பர் 11-ஆம் தேதி, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, சட்டமன்றத்தில் நடந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில், நம்முடைய ஓ.பி.எஸ். அவர்கள் பேசினார். மறுநாள் காலையில், முரசொலியில் என்ன ஹெட்லைன்ஸ் போட்டார்கள் தெரியுமா? "பச்சைத்தமிழர் பன்னீர் செல்வம்" என்று குறிப்பிட்டுச் செய்தி வெளியிட்டார்கள்.

நம்முடைய ஓ.பி.எஸ்-உம் முரசொலி செய்தியைக் குறிப்பிட்டு, அவையில் பேசினார். உடனே தலைவர் கலைஞர் என்ன சொன்னார் என்றால், "பச்சைத்தமிழர் பன்னீர்செல்வம் அதற்காகக் கவலைப்படக் கூடாது. பச்சைத்தமிழர் என்று தந்தை பெரியார் அவர்கள் காமராசருக்குப் பட்டமே கொடுத்திருக்கிறார். அதைத்தான் முரசொலி கொடுத்திருக்கிறது. அதுவும் முரசு அடித்துக் கொடுத்திருக்கிறது" என்று தலைவர் கலைஞர் சொன்னார். இப்படி தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்ட ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்ததை நினைத்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நம்முடைய ஓ.பி.எஸ் அவர்களின் ஸ்பெஷாலிட்டி என்ன என்று கேட்டால், எப்போதும் சிரித்த முகமாகத்தான் இருப்பார். இப்போதுகூட பாருங்கள்... அதுதான் அவருடைய பண்பு! பொதுவாக, ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டால்தான் பிரச்சினை ஆகும்; ஆனால், நம்முடைய ஓ.பி.எஸ். அவர்களுக்கு அவருடைய சிரிப்பே ஒருகாலத்தில் பிரச்சினை ஆகிவிட்டது! ஒருமுறை அவர் என்னைப் பார்த்து சட்டமன்றத்தில் சிரித்துவிட்டார். உடனே, ஸ்டாலினைப் பார்த்து ஓ.பி.எஸ். சிரித்துவிட்டார் என்று, ஏதோ, இரண்டு நாட்டுக்குள்ளே போர் வந்த மாதிரி பிரச்சினையாக ஆக்கிவிட்டார்கள்! அரசியலில், ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம்; ஆனால், சட்டமன்றத்திலும், பொது வெளியிலும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளும்போது, நலம் விசாரித்துக் கொள்வது அரசியல் மாண்பு; அதுதான் பண்பாடு! அப்படித்தான், அப்போது முதலமைச்சராக இருந்த சகோதரர் ஓ.பி.எஸ். அவர்களைப் பார்த்து, மரியாதைக்காக வணக்கம் வைத்தேன். அவரும் சிரித்தார். உடனே இதைக் குற்றச்சாட்டாக ஆக்கிவிட்டார்கள்.

ஆனால், யார் என்ன சொன்னாலும், தன்னுடைய பண்பை மாற்றிக் கொள்ளாமல், அமைதியுடனும், அன்புடனும், அதே சிரித்த முகத்துடனும் இன்றைக்கும் இருக்கிறார் நம்முடைய ஓ.பி.எஸ். அவர்கள்.

அமைதியும் - புன்னகையும் மட்டுமல்ல, ஓ.பி.எஸ். என்று சொன்னால், ஞாபகத்திற்கு வருகின்ற ஒரே சொல், "விசுவாசம்!" மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தான் அமர்ந்த முதலமைச்சர் இருக்கையில், நம்முடைய ஓ.பி.எஸ். அவர்களை இரண்டு முறை அமர வைத்தார். தன்னிடம் ஒப்படைத்த அரசாட்சியை, எந்தத் துரோகமும் இல்லாமல், திருப்பி ஒப்படைத்த நேர்மைக்குச் சொந்தக்காரர் தான் ஓ.பி.எஸ்.! அதனால்தான், அம்மையார் ஜெயலலிதா அவர்களே, சகோதரர் ஓ.பி.எஸ். அவர்களைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார்.

விசுவாசத்துக்கு ஒரு ஓ.பி.எஸ். என்றால், துரோகத்திற்கு அடையாளமாக இருப்பவர்தான் பழனிசாமி அவர்கள். கூவத்தூரில், அம்மையார் சசிகலா காலில் ஊர்ந்து, தவழ்ந்து சென்று முதலமைச்சராகிவிட்டு, அந்த அம்மையாரை நோக்கியே, "நீ எனக்குப் பதவி பெற்று தந்தாயா?" என்று ஒருமையில் கேட்டவர்தான் பழனிசாமி அவர்கள்.

தொடச்சி 6–ஆம் பக்கம்